குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.92/2020

அ.சா.2

2025-ம் ஆண்டு நவம்பர் 18-ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 02-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்	அருண்	தொழில்	
தந்தை பெயர்	சந்திரன்	வயது	
கிராமம்		தாலுக்கா	

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.00 மணி,

Accused Jayakumar present. Advocate Mr.Dhanakoteeswaran present for accused. APP Mr.M.Suresh present.

முதல் விசாரணை :

1. நான் பனங்காட்டில் குடியிருந்து, பிளக்ஸ் பேனர் கடை வைத்துள்ளேன். இவ்வழக்கு விபத்தில் காயமடைந்து இறந்போன வெங்கடேஷ் எனது நண்பர். கடந்த 08.09.2019 ஆம் தேதி பகல் 01.30 மணியளவில் நானும், சுதாகர் என்பவரும் முத்துநாயக்கன்பட்டி சாலையில் உள்ள சிவா கார்டன் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம்.

2. அப்போது வெங்கடேஷ் இருசக்கர வாகனத்தில் ஓமலூர் பக்கமிருந்து முத்துநாயக்கன்பட்டி நோக்கி வந்தார். அப்போது டாடா ஏசிஇ வாகனம் முத்துநாயக்கன்பட்டி - ஓமலூர் நோக்கி வந்தது. நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது டமார் என்று சத்தம் கேட்டது. நாங்கள் திரும்பி பார்த்தபோது, டாடா ஏசிஇ வாகனம் இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது.

3. அதில், வெங்கடேசனுக்கு வலது பக்க காதில் இரத்தம் வந்தது. தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நான் வெங்கடேசன் வீட்டிற்கு தகவல் சொன்னேன். பின்பு, அவரை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். வெங்கடேஷ் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் டி.என்.30

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:13:01 +0530

பி.எஸ்.1643 ஆகும். விபத்து ஏற்படுத்திய டாடா ஏசிஇ வாகனத்தின் பதிவெண் மற்றும் அதனை ஓட்டி வந்த நபர் குறித்து எனக்கு தெரியாது. விசாரித்தபோது மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த நபர் ராஜா மகன் ஜெயக்குமார் என்று சொன்னார்கள்.

4. சேலம் எஸ்.கே.எஸ் மருத்துவமனையில் 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். அதன்பின்பு, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

5. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு 10 நபர்களுக்கு மேல் இருந்தார்கள். சம்பவ இடம் வளைவான பகுதி என்றாலும், எதிரே வரும் வாகனங்களை பார்க்கமுடியாது என்றாலும், வளைவான பகுதி, ஆனால், வாகனங்களை பார்க்கமுடியும். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது விபத்தில் இறந்த வெங்கடேஷ் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரி.

6. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலும் மருத்துவமனையிலும் வைத்து விசாரித்தார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்த நபர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.09 மணி.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.18 17:13:05 +0530